[1975 ஏப்ரல் 7

(முற்பகல் 10-00)

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த அகதிகள் புனர் வாழ்வு திட்டத்தின் அடிப்படையிலே பல்வேறு இடங்களில் குடி அமைப்பு செய்வதற்கு திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்த திட்டங்களெல்லாம் முழுமை பெறவில்லை. உதாரணத்திற்கு வியாசர்பாடி போன்ற பகுதியில் இருக்கிறவர்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு 3 செண்ட் நிலமாவது கொடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன். அதுவல்லாமல் அவர்களுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் குறைவாக இருக்கிறது. அதையும் சற்று உயர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாவென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, சமீபத்தில்தான் அவர்கள் இங்கு வந்து ஒரு கூட்டமே கூட்டி, அதிகாரிகளை வைத்து ஆலோசனை நடத்தி அவர்களுக்கு இடங்கள் ஒதுக்குவது பற்றி முடிவு எடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் கொடுக்கிற நிதி கட்டிடத் திற்குப் போதவில்லை என்ற காரணத்தினால் மீண்டும் கேட்டிருக் கிறோம். அவர்கள் கொடுக்கவில்லையென்றால் தமிழக அரசே செய்வதற்கு முதலமைச்சரவர்களைக் கலந்து ஆவன செய்யலாம் என்று முடிவு செய்திருக்கிறோம்.

சீத்தாபுரம் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*579 வினு—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுப்பாக்கம் தொகுதியில் சீத்தாபுரம் அரிசன குடியிருப்பில் உள்ளவர்களுக்கு அந்த இடத்தை பட்டா செய்து தரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) & (இ) சீதாபுரம் அரிசன காலனியில் உள்ள அரிசனங்களுக்கு வீட்டுமனை வசதி அளிப்பதற்காக திம்மாபுரம் கிராமத்தில் 6.75 ஏக்கர் புஞ்சை

1975 ஏப்ரல் 7]

நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கான பிரிவு 6 விளம்பல் வரைவு 22—12—1972 அரசால் ஏற்கப்பட்டு, 13--9--1974-ல் மாவட்ட ஆட்சியாளரால் அவார்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. வீட்டு மனைக்கான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, கடந்த 4, 5 ஆண்டு களாக நம்முடைய சர்க்கார் இதை அங்கீகரித்தும் கூட, அவர்கள் பட்டா பெறுவதற்கான வாய்ப்பை அங்கீகரிக்கின்ற சில பெரிய மனிதர்கள் கெடுக்கிறார்கள் என்று சொல்லப்படு கிறதே, ஊராட்சித் தலைவர் கெடுக்கிறார் என்று அங்கிருக்கிற மக்கள் சொல்கிறார்களே, இதனால்தான் காலதாமதம் என்று அந்த மக்கள் கருதுகிறார்களே, இது உண்மையாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, இப்போது வரைபடங்கள் தயாராகி மனைகளில் வீடுகள் கட்டு வதற்கு நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

குளித்தலையிலுள்ள அரிசன மாணவர் விடுதி

*** 580 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை அரிசன மாணவர் விடுதியில் மாணவர் களுக்கு முட்டை, பால் தருவதில்லை என்று கூறப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குப் பதிலாக வேறு ஏதாவது சத்துள்ள உணவு வழங்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, குளித்தலை அரசினர் மாணவர் விடுதியில் முட்டை, பால் தருவதில்லை என்று பல மாணவர்கள் முறையிட்ட பிறகுதான் இந்தக் கேள்வியை நான் எழுப்பினேன். ஆனால் அமைச்சரவர்கள் இல்லையென்று கூறுகிறார்கள். இருந்தாலும் பரவாயில்லை. மாணவர்களுக்கு சத்துணவு தருவதற்குத்தான் முட்டை, பால், வழங்க ஏற்பாடு

செய்யப்பட்டிருக்கிறது. பல மாணவர்கள் விடுதிகளில் முட்டை, பால் கொடுப்பதில்லை. ஆகவே, இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் எந்தப் புகாரை வைத்து முட்டை, பால் வழங்கப்படவில்லையென்று சொன்னார்களோ அதே போல எங்கும் நிலைமை இருந்த காரணத்தினால் இதைப் பற்றி ஆலோசிப்பதற்கு முன்னால் வறட்சி நிலை ஏற்பட்டு அதன் காரணமாக அரிசி விலை ஏறிவிட்டதாலும், மற்ற பண்டங்களின் விலை அதிகரித்து விட்டபடியாலும் 5 ரூபாய் அதிகப்படியாக முட்டை, பாலுக்காக கொடுக்கப்பட்டதையும் சேர்த்து ஏற்கெனவே மாணவர்களுக்குக் கொடுத்து வந்த உணவின் அளவுகள் குறையக்கூடாது என்று சரி செய்து வைத்திருக்கிறோம், இது தற்காலிகமானதுதான். இதை பின்னால் ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் தலைவரவர்களே, இப்போது நகரத்தில் வழங்குகிற உணவு மிகவும் புழு நிறைந்ததாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுரேந்திரன் இந்த பாயிண்ட் ஆஃப் ஆர்டரைப் பற்றி ஏற்கெனவே அனுமதிக்க முடியாது, அப்ரோப்பிரியேஷன் பில்லில் பேசிக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். அப்படியிருந்தும் இப்போது பேசுவது முறை யல்ல.

வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) கவன ஈர்ப்பு

கூடலூர் தாலூகா, கொலப்புள்ளி என்ற இடத்தில் புது வாழ்வுத் திட்டத்தில் இலங்கை தமிழருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படாமை குறித்து.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, பேரவை விதி 41-ன் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு அரிசன நல அமைச்சரின் கவனத்திற்குக் கிற்குக் கொண்டு வருகிறேன்.